**உடுநுவர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 08 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 மற்றும் 2.2.2 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக உடுநுவர பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த ஐந்தொகையில் சொத்துக்கள் நிரலின் கூட்டுத்தொகை ரூபா 354,835,659 மற்றும் பொறுப்புக்கள் நிரலின் கூட்டுத்தொகை ரூபா 354,779,094 ஆக இருந்தமையால் ரூபா 56,565 பெறுமதியில் ஐந்தொகை சமப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற ரூபா 35,782,296 பெறுமதியான 4 வாகனங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கையில் மீளாய்வாண்டின் போதும் அப்பெறுமதி மீண்டும் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்கள் மற்றும் வருமானத்தில் பங்களிக்கும் கணக்கு ரூபா 35,782,296 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் ரூபா 21,500 ஆன கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணக் கணக்கின் கீழ் கொள்வனவாக ரூபா 3,689,150 காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டணங்கள் பட்டியலிடல் பெறுமதி ரூபா 50,753,750 ஆக இருந்த போதிலும், ரூபா 21,916,222 ஆக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானங்கள் ரூபா 28,837,528 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) வருடக் கணக்காக முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபபா 167,349 ஆன நீர் வைப்பு மீதியொன்று மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 6 நிலையான வைப்புக்களுக்குரிய மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 1,778,346 ஆன வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) 2014, 2015 மற்றும் மீளாய்வாண்டின் போதும் வெளியக நிதிஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 31 நிர்மாண வேலைகளுக்குரிய ரூபா 991,200 ஆன நிறுத்தி வைத்தல்கள் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) கிரி வவுல கல்அங்க வீதியின் வடிகான் முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக 2016 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 200,000 ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அத்தொகையை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) நிலையான வைப்புக்களின் பேரில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 2,500,000 ஆன பணத்திற்காக மீளாய்வாண்டிற்குரிய வட்டி ரூபா 237,878 ஆக இருந்த போதிலும், அது ரூபா 875,500 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 637,622 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது ரூபா 120,305 பெறுமதியான மின் உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், அது 10,982 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 109,323 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஓ) ரூபா 783,350 ஆன காணி மற்றும் கட்டிட உருப்படிகள் 48 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வின் போது கைதவிர்ப்பதற்கு இனங்காணப்பட்ட ரூபா 62,619 பெறுமதியான நூலகப் புத்தகங்களை அழிக்காமல் நூலகப் புத்தக பெறுமதியிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

(க்) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 114,000 பெறுமதியான மின்உபகரணங்களின் பெறுமதி களஞ்சிய முற்பணக் கணக்கு முறைமையின் பிரகாரம் மின் களஞ்சிய கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் முழுச்செலவினமும் செலவின தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. கோள்வனவு செய்வதற்கோ அல்லது விநியோகிப்பதற்குரித்தில்லாத மற்றும் விளக்கமளிப்பதற்கு தவறிய ரூபா 11,400 பெறுமதியான மின் களஞ்சியக் கணக்கிற்கு வரவு வைத்து செலவுத் தலைப்பு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(கா) சபைக்குச் சொந்தமான 251 குழாய்க் கிணறுகளின் பெறுமதி மற்றும் அதற்குரிய காணிகளின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) மீளாய்வாண்டின் நீதிமன்ற தண்டப் பட்டியலிடல் ரூபா 1,288,982 ஆக இருந்த போதிலும், அது ரூபா 821,819 ஆக கணக்கீடு செய்த காரணத்தினால் ரூபா 407,163 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(கு) சேகரிக்கப்பட்ட ஏக்கர் வரி அளவு குறிப்பாக இனங்காணப்படாமல் கற்பனை அடிப்படையில் ரூபா 14,000 ஆன பெறுமதி நிலுவை ஏக்கர் வரியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(கூ) 05 வருமான விடயங்களுக்குரிய பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதி ரூபா 53,097,516 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அவ்விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 76,170,529 ஆக காண்பிக்கப்பட்டமையால் வருமானம் ரூபா 23,073,013 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 14 கணக்கு விடயங்களின் மீதி பயன்பாட்டு பட்டோலைகளுடன் ஒப்பிடும் போது ரூபா 50,598,729 தொகையான இணக்கமின்மை கண்டறியப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,667,314 ஆன தொங்கல் கணக்கு மீதியொன்று காணப்பட்ட போதிலும் அம்மீதிக்கு காரணமான விடயங்களை கண்டுபிடித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 6 பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 54,356,920 தொகையானதுடன் அந்நிலுவை கடன் மீதிகளின் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 36,149,310 தொகையானதுடன் அந்நிலுவை கடன் மீதிகளின் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

6 கணக்கு விடயங்களிற்கு உரித்தான தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் ரூபா 85,890,558 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திரகமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) இன் பிரகாரம் 1992 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை 76 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கேள்வி வைப்புக்கள் ரூபா 158,900 மற்றும் 1989 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை 158 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை பிணை வைப்புக்கள் ரூபா 330,273 தொகையை தீர்வு செய்வதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 57,207,972 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,709,300 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 47,498,672 ஆன அதிகரிப்பு ஒன்று காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

வீத வரி, குத்தகை, அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ஏனைய வருமானம் போன்ற வருமான விடயங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 55,798,466 ஆன மீதியொன்று நிலுயையாக இருந்தது. ஆத்திகதியில் வழங்கப்பட்டிருந்த நிலுவை வருமான பகுப்பாய்வு மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமான விபரங்கள் என்பவற்றிற்கிடையெ ரூபா 17,681,282 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. ஆவ்வாறே வருமான பதிவேட்டினை நாளதுவரையாக தயாரிக்கப்படாமையால் அம்மீதிகளின் சரியான தனமையை திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை.

### 2.2.2 வீதவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 17 அரச நிறுவனங்களிடமிருந்து 10 ஆண்டுகளுக்கு மெற்பட்ட காலமாக நிலுவையாக இருந்த ரூபா 479,688 ஆன நிலுவை வீதவரிக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வீதவரி சேர்க்கும் போது ரூபா 1,023,556 ஆன நிதி முறைகேடொன்று வெளிப்படுத்தப்பட்டதுடன், மேலும் வெளிக்களத்தில் அவ்வாறான நிதி முறைகேடுகளுக்குரிய விடயங்கள் கண்டறியப்பட்டு வருவதுடன் காணப்பட்டன. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப மற்றும் இறுதி பரிசோதனைகள் முடிவடைந்திராமையால், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 14,319,281 ஆன நிலுவை வீதவரி மீதியின் சரியான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியவில்லை.

### 2.2.3 குத்தகை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 மார்ச் 17 ஆம் திகதிய 2016/3 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை சபைக்குச் சொந்தமான கடைகளின் குத்தகை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தவுலகல சந்தையில் உள்ள 9 கடைகளுக்காக நீண்டகால 99 வருட குத்தகைக்கு கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ஆ) கெலிஓய பொது வர்த்தக தொகுதியின் 17 கடைகளுக்குரிய 2012 ஆம் ஆண்டின் போது ஓராண்டு காலத்திற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2016 திசெம்பர் மாதம் வரையிலும் 3 வருடங்கள் கடந்திருந்த போதிலும் புதிய உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,160,551 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 21,916,222 தொகையும் அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 - 2019 ஆம் மெவுகை செய்யப்படும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்த நான்கு ஆண்டு திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் ரூபா 40,350,000 பெறுமதியான 146 நிர்மாண வேலைகளை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்நிர்மாணங்கள் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 57,207,972 ஆன மீண்டெழும் வருமானத்தலிருந்து உழைக்கப்பட்டிருந்த போதிலும் அதில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 2,308,747 தொகையான 4 சதவீதமான குறைந்த அளவே ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதிஏற்பாடுகளை ஈடுபடுத்தாமல் ரூபா 46,000,000 ஆன நிதி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) செலவின விடயம் 304-5 இன் கீழ் வரி செலுத்தும் மக்களின் வேண்டுகோளிற்காக சபை நிதியத்தலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,000,000 ஆன நிதிஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரத்தின் 22 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக சிறு வீதிகள் பாதசாரி மேடை திருத்தங்கள் மற்றும் வடிகாண் திருத்தங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,500,000 ஆன நிதிஏற்பாடுகள் அந்நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 12 பதவிகளில் வெற்றிடங்களும் 4 மிகைகளும் காணப்பட்டன.

(ஆ) ஊழியர் கடன், ஏக்கர் வரி, நிலையான சொத்துக்கள், பொது வழங்கல் கடன்கொடுத்தோர், முத்திரைக் கட்டணங்கள், நீதிமன்றத் தண்டப்பணம், வீத வரி கடை வாடகை, கேள்வி வைப்புக்கள், செலவினம் மற்றும் பி.ச. பதிவேடுகள் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகளை சீராக்குவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சபை நிதியத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 3,687,616 பெறுமதியான 32 நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு கடன்கொடுத்தோராக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்நிர்மாணங்களுக்குரிய மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் எவ்வித காரணங்கள் குறிப்பிடப்படாமலும் அங்கீகாரமின்றியும் மீளாய்வாண்டில் கடன்கொடுத்தோரிடமிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 45 நிர்மாண வேலைகளுக்குரிய ரூபா 1,032,032 ஆன நிறுத்த வைத்தல் தொகை தொடர்பாக போதியளவு விசாரணை மற்றும் ஆராய்ந்து பார்க்காமலும் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டின் போது சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 310 பிரித்தல் விண்ணப்பபடிவங்களிலிருந்து 59 விண்ணப்பங்களின் வேலை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அல்பிட்டியகந்த பொது நூலகத்திலிருந்து காணாமல் போயிருந்த ரூபா 1,626 பெறுமதியான 144 புத்தகங்கள் மற்றும் அலபலாவ நூலகத்தின் ரூபா 6,388 பெறுமதியான 58 புத்தகங்கள் பற்றாக்குறை தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 1992 பெப்ரவரி 26 ஆந் திகதிய 05/01/119 தொகுதி ix ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 01 ஆம் பந்தியின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக நடவடிக்கை எடுத்து சபையால் திட்டமிடல் குழுக் கூட்டங்களை கடமை நேரத்தில் நடாத்தி மீளாய்வாண்டினுள் ரூபா 270,250 தொகை குழுப் படிகளாக செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) திட்டமிடல் குழுவிற்காக கடமை நேரத்தில் வருகை தந்ததாக குறிப்பிட்டுடிருந்த 6 உத்தியோகத்தர்களுக்கு அத்திடமிடல் குழு கூடிய தினங்களில் கடமைக்கு சமூகமளித்தாக அறிக்கையிடப்படாதிருக்கையில் குழுப் படிகளாக ரூபா 27,000 மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்தன.

**3.5 விளைவற்ற குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

ரூபா 1,069,000 பெறுமதியான 3 வாகனங்கள், பெறுமதி இனங்காணப்படாத வாகனமொன்றும் ரூபா 62,200 பெறுமதியான 2 இருப்பு உருப்படிகள், 5 ஆண்டு காலமாக விளைவற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் காணப்பட்டன.

**3.6 வெளிப்படையான முறைகேடுகள்**

2011 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சபை நிதியத்தின வீதவரிப் பெறுவனவுகள் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் என்பவற்றை சேகரிக்கும் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 1,114,375 ஆன நிதி மோசடிகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.7 ஒப்பந்த நிர்வாகம்**

கொஸ்ஹின்ன மயானகூடத்தின் புகைகூடு அதிகளவில் சிதைவடைந்து பாதிப்படைந்த காரணத்தினால் இலங்கை தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திடம் திருத்தங்களை செய்து தருமாறு கோரப்பட்ட வேண்டுகளின் பிரகாரம் ரூபா 921,980 ஆன மதிப்பீடொன்று கிடைத்திருந்தது. எனினும் அந்நிறுவனத்திற்கு நிர்மாணத்தைக் கையளிக்காமல் 1988 பிரதேச சபை (நிதி, நிர்வாக) விதிகள் 177 மற்றும் 178 இன் பிரகாரம் முறையான கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமலும் உரிய திருத்த வேலைகளை 2015 நவம்பர் 10 ஆந் திகதி ரூபா 825,000 அது தொடர்பான நிபுணத்துவம் இல்லாத உதய தொழிற்சாலைக்கு ஒப்பதந்தகாரருக்கு கையளித்து ரூபா 738,169 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. திருத்த வேலைகள் முடிவடைந்து 4 மாதங்களின் பின்னர் மயானகூடம் பூரணமாக செயலற்று காணப்பட்டது.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 4 வருமான விடபங்களில் 15 சதவீதம் முதல் 62 சதவீதம் வரையும் 6 செலவின விடயங்களில் 19

சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் வீதிகள், காணி மற்றும் கட்டிடங்கள் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக 3 ஆம் இலக்க நிகழ்ச்சித்திட்டத்தின் 304 ஆம் செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 31,552,000 ஆன நிதிஏற்பாடுகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 218,231 தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

**4.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்**

---

மீளாய்வாண்டில் ரூபா 46,106,431 ஆன மூலதனச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்த நிர்வாகம்
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்